<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை</u>
<u>அசல் வழக்கு எண். 255/2019</u>

**2025–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 08–ம் நாள் திங்கள் கிழமை** வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய DW–1 வது நபரின் வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :பஷீருதீன் | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | :நூர்தீன் சாயபு | வட்டம் | :வேப்பந்தட்டை |
| கிராமம் | : தேவையூர் | வயது | : 84/2025 |

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

(i) எனக்கு எழுதபடிக்க தெரியும். வாதி உமர்அலியுடன் உடன் பிறந்தர்வர்கள் யார்யார் என்றால் அகமது உசேன், முகமது அனீப், செளகத் அலி. வாதி மற்றும் அவரது உடன் பிறந்த சகோதரர்கள் கடந்த 1959ம் ஆண்டு ஒரு பதிவு செயய்யப்பட்ட பாக அட்டவணை மூலம் அவர்களது குடும்ப சொத்துக்களை பொருத்து பாகம் பிரித்துக்கொண்ட விவரம் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியும். அவ்வாறு பாகம் பிரித்துக்கொண்டதில் தாவா சொத்தான 3 1/4 செண்ட் வாதியின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பாகபத்திர தேதியிலிருந்து தாவா சொத்தான 3 ¼ செண்ட்டை வாதி தான் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான். தாவா சொத்திற்கான பழைய சர்வே எண்.675/12A மற்றும் புதிய சர்வே எண்.304/12A2 என்றால் சரிதான். பழைய சர்வே எண்.675/12A மற்றும் புதிய சர்வே எண்.304/12A மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 9 செண்ட். அந்த மொத்த விஸ்தீரணம் 9 செண்ட்டை நிரூபணம் செய்ய எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல பாக அட்டவணை தாக்கல் செய்துள்ளேன். வருவாய் துறை ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

(ii) எனது எதிர்வழக்குரை மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் கூறியுள்ள விவரம் தாவா சொத்தினை தேசிய நெடுஞ்சாலைக்காக அரசால் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டதற்கு எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வதை போல் தாவா சொத்தினை தேசிய நெடுஞ்சாலைக்காக அரசால் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டதற்கு எனது தரப்பில் எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யயவில்லை என்றால் சரிதான். வாதி தரப்பில் வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வாய்தா அளித்து ஒத்திவைக்கப்படுகிறது.